1992 மார்ச் 9]

திரு. வி. தண்டாயுதபாணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றங்கள் இருந்தால் மட்டும் போதாது ; அமைத்தால் மட்டும் போதாது. குடியாத்தத்திலே மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றத்திலே 9 மாத காலமாக ஸ்ட்ரைக் நடைபெற்றுக்கொண்டு வருகிறது. இதை மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் அறிவார்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தண்டாயுதபாணி, நீங்கள் கேட்பது கேள்வியையொட்டி இருக்கவேண்டும். இன்னொரு ஊரில் நீதிபதி இருக்கிறாரா இல்லையா என்பதற்கு நேரடியான பதில் அமைச்சருக்குத் தெரிந்து இருக்கலாம். ஆனால், இது தொடர்புடைய கோப்பில் அது இருக்காது. நீங்கள் இது தொடர்புடைய கேள்விக்குத் தனிக் கேள்வி போடவும், அல்லது அமரவும்.

அடுத்து வினா எண் 121, திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

121—

நாச்சியார்கோவிலில் வணிகவரி துணை அலுவலகம்

*662 திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம் நாச்சியார்கோவிலில் வணிகவரி துணை அலுவலகம் அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் " இல்லை " என்று சொன்னார்கள். இருந்தாலும் அதை அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து, அங்கே அமைப்பதற்கான ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்கின்ற அதே நேரத்தில், இந்தத் துணை

வணிகவரி அலுவலகம் அமைப்பதற்கு எல்லா ஆயத்தப் பணிகளும் நடைபெற்றதாக நான் அறிந்தேன். ஆகவே, அந்த ஆயத்தப் பணிகள் குறித்து, துணை வணிகவரி அலுவலகம் அமைப்பதற்கு என்னென்ன தகுதிகள் வேண்டும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நாச்சியார்கோவில் என்பது மிகச் சிறிய ஊர். அந்த ஊர் கும்பகோணத்திற்கும் கொடவாசலுக்கும் இடையில், கும்பகோணத்திலிருந்து 10 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. அங்கே பதிவு செய்த வியாபாரிகள் 110 பேர் தான்; அதிலே வரி கொடுப்பவர்கள் 48 பேர்தான். ஓர் ஆண்டிற்கு வருகிற மொத்த வரியே 2 இலட்சத்து 4 ஆயிரம் ரூபாய் தான். அங்கே ஓர் திரையரங்கம் இருக்கிறது. அதில் ஆண்டுக்கு வருமானம் 68 ஆயிரம் ரூபாய்தான். ஆகையால், அந்தக் கிராமத்தில் ஓர் துணை வணிகவரி அலுவலகம் அமைப்பதற்கு வேண்டிய எந்தவிதமான சாத்தியக்கூறுகளும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. என். பன்னீர் செல்வம்.

திரு. என். பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாச்சியார்கோவில் என்பது நான்கு தொகுதிகளை இணைத்து வரக்கூடிய ஓர் ஊர் ஆகும். காரைக்காலிலிருந்து வருகின்ற வழியும், மன்னார்குடியிலிருந்து கும்பகோணம் வருகின்ற வழியும், என் தொகுதி திருவிடைமருதூரையும் சேர்த்து அமைந்து இருக்கக்கூடிய அமைப்புக்கு ஓர் நேரடியான பாதையாகும். அங்கே, அந்தக் கிராமத்திலே அதிகப்படியான பட்டரை தொழிற்சாலைகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. ஆகவே, ஓர் துணை வருமானவரி அலுவலகத்தை அங்கே ஏற்படுத்துவதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பதிலை முன்பே சொல்லிவிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 122, திரு. எம். தங்கவேல், மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்.